Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 மாசி (02 - 02 1991) சனிக்கிழமை ஓசை: 349

## தென்னாபிரிக்காவில் நிறவெறிச்சட்டங்கள் ரத்து

(கோப்டவுன்)

தென்னாபிரிக்காவில் உள்ள அனைத்து நிறவெறிச்சட்டங்களும் ரத்துச்செய்யப்படும் என தென்னாபிரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்,

நிறவெறிச்சட்டங்கள் ரத்துச்செய்யப்பட வேண்டும் என பலகலைக்கழக உறுப்பினர்கள் போராட்டம் நடாத்திக் கொண்டிருந்த வேளையிலேயே ஜனாதிபதி இவ்வாறு (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா ராணுவத்தின் மிலேச்சத்தனம்

# கொழும்பு பயணிகள் மீது கண்மூடித்தனமான சூடு

### ஒருவர் ஸ்தலத்திலேயே பலி; மூவர் படுகாயம்

(வவுனியா)

கொழும்பு செல்வதற்காக காத்து நின்ற பொது மக்கள் மீது வவுனியா நகர காவலரணில் இருந்த இராணுவத்தினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணமடைந்தார் மூவர் காயமடைந்தனர் காயமடைந்தவர்களில் ஒருவர் தலையில் குண்டடிப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வட பகுதியிலிருந்து வவுனியா ஊடாக கொழும்பு செல்வதற்காக நேற்று முன் தினம் நண்பகல் பெருந் தொகையான தமிழ் மக்கள் காத்து நின்றனர். ஆனால் சிறிலங்கா இராணுவத்தினர் எவரையும் அனுமதிக்கவில்லை பின்னர் திடீரென இராணுவத்தினரால் வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

ஒவ்வொரு வேட்டாகத் தீர்க்கப்பட்ட இந்த வேட்டுகளில் சிக்கிய ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மூவர் காயமடைந்தனர். காயமடைந்த ஒருவருக்கு தலையில் சூடு பிடித்தது அவர் தலைதிலேயே வீழ்ந்தார் இதனைத் தொடர்ந்து மக்கள் பதறியடித்துக் கொண்டு ஓடினர், (4 ஆம் பக்கம் பார்க்க)

## பெரியபளையில இளம்பெண் காயம்

(செ. த. மை)

ஆனையிறவு கடை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின்போது பெரியபளையைச் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 7 யாழ். வாசிகள் கைது

(கொழும்பு)

போலி விசா மூலம் லண்டன் செல்ல முற்பட்ட ஏழு யாழ். வாசிகளைக் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இரகசிய பொலிஸார் கைது செய்துள்ளதாகக் கொழும்பில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாத்திரிகர்கள் வாகனம் மீது ஹெலி தாக்கு; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி தரிசனத்திற்காக சென்ற யாத்திரிகர்கள் மீது ஹெலி தாக்கியதால் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அண்மையில் மேற்படி சம்பவம் இடம்பெற்றது,

அராலியிலிருந்து மிருசுவிலுக்கு கோயில் தரிசனத்திற்காக வாடகை வாகனத்தில் சென்றுகொண்டிருந்த யாத்திரிகர்கள் மீது இந்த ஹெலி தாக்குதல் இடம்பெற்றது

இத் தாக்குதலில் வாகன ஓட்டுநர் க. நித்தியானந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு ஷெல்லினால் முரசுமோட்டை கடை சேதம்

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவமுகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்று முரசுமோட்டையிலுள்ள செல்வம் ஸ்ரோர்ஸ் எனனும் தனியார் கடையொன்றில் வீழ்ந்து வெடித்ததில் கடைமுற்றாக சேதமடைந்தது.

நேற்று முன்தினம் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சு மேற்கொள்ளப்பட்டது. முரசுமோட்டைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்களில் ஒன்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபை தொழிலாளர் திடீர் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைத் தொழிலாளர்கள் நேற்றுத் திடீரென வேலை நிறுத்தம் செய்தனர். ஏனைய அரச அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டது போல தமக்கு வழங்கப்படவேண்டிய 50வீத கஷ்டநிவாரணப் படி வழங்கப்படவேண்டுமென்றுகோரியிருந்தும் இதுவரை வழங்கப்படாமையால் தாம் அடையாளவேலை நிறுத்தம் செய்வதாக அவர்கள் கூறினர்.

இவ்விடயம் பற்றி யாழ். மாநகர சபை ஆணையாளர் வி.பி. பாலசிங்கம் தெரிவிக்கையில் தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானது என்பதைத் தாம் ஒத்துக் கொள்வதாகவும், ஆனால் (4ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரமதோடர்பான செய்திகள் அதிகாரிகளால் இருட்டடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட பகுதிக்கு மின்சாரம் கொண்டுவருவதுபற்றிய செய்திகள் மின்சார சபை அதிகாரிகளால் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது இச்சபையின் பிராந்தியமுகாமையாளர் உட்பட அனைத்து அதிகாரிகளும் மின்சாரம் மீளகொண்டு வருமவிடயங்களைப் பெரும் பிரயத்தனம் செய்து மூடி மறைக்கவே எத்தனித்து வருகின்றனர்.

இருந்தும் சில விடயமறிந்த மின்சாரசபை வட்டாரங்களிலிருந்து கிடைத்துள்ள செய்திகளின்படி மின்சார சபைக்குத் தற்போது அத்தியாவசியமாக தேவையான உபகரணங்களை பெற்று வடபகுதிக்குக் கொண்டுவரும் பொருட்டு (4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய உலக முறைமைக்காக ஈராக் போராடுகிறது

-தாரிக் அஸீஸ்

(பாக்தாத்)

புதிய காலனித்துவத்தை எதிர்த்து புதிய உலக முறைமையை ஏற்படுத்த ஈராக் போராடுகிறது என ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சர் தாரிக் அசீஸ் தெரிவித்துள்ளார்,

மண்டல சார்பற்ற நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுக்கு தாரிக் அசீஸ் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

ஈராக் உருவாக்க விரும்பும் அந்த புதிய உலக முறைமையில் வளரும் நாடுகளின் நலன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானில் பூமி அதிர்ச்சி

ஆப்கானிஸ்தானின் எல்லைப்புறத்தை அண்டிய பகுதியில் நேற்று அதிகாலை நான்கு மணியளவில் ஒரு நிமிடம் பூமியதிர்ச்சி இடம்பெற்றது. இதனால் பெருமளவு கட்டிடங்கள் இடிபாடு அடைந்ததோடு பெருமளவு கால்நடைகளுடன் எண்பது பேர் இறந்து போயினர் சில வட இந்திய நகரங்களிலும் இதன் தாக்கத்தை உணர முடிந்ததாகத் தெரிகிறது.

## பல்க. மாணவர் நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கான உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்ட சமயம் 1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் மற்றும் அதன் சார்புக் குழுக்களினாலும் படுகொலை செய்யப்பட்ட சிங்கப்பூர் மாணவர்களாகிய சந்திரவேந்திரா, ஜெகநாதன் ஆகியோரின் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று இன்று காலை 10 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் இவர்கள் நினைவாக சேகரிக்கப்பட்ட நிதி இம் மாணவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும். (க)

## பத்திரிகைகள் கண்டனம்

(டில்லி)

தமிழக அரசு கலைக்கப்பட்டது தொடர்பாக இந்தியாவில் இருந்து வெளிவரும் முன்னணிப் பத்திரிகைகள் யாவும் சந்திரசேகர் அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்தன. அரசியல் சட்டத்திற்கு முரணானது ஜனநாயகவிரோதமானது என்று கண்டித்து பல பத்திரிகைகள் எழுதியுள்ளன. தி. மு. க. அரசைக் கலைக்க ஜனாதிபதி மறுத்து தெரிவித்ததாக செய்தி வெளியிட்டுள்ளன,

## இராணுவம், பொலிஸ், ரெலோ

## முக்கூட்டுப்படை வாகனம் முந்நூறுயாருக்குள் தகர்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவம், பொலிஸ் ரெலோ குழு பயணம் செய்த எல்வ் வாகனம் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி முற்றாகச் சேதமடைந்தது. வாகனத்தில் வந்தவர்களில் பலர் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும்உள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெல்லாவெளி இராணுவ முகாமிலிருந்து எல்வ் வாகனமொன்றில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இதோபணம்! தருக மண்ணெய்

- யாழ்.டாக்டர்கள்

## இலவச பெற்றோல் உடன் தருக

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவ மனையின் வைத்தியகலாநிதிகள் நேற்று ஒரு லீற்றர் மண்ணெண்ணையைப் பெறுவதற்காக பல மணி நேரம் "கியூ" வில் நிற்கின்ற கொழும்பு டாக்டர்கள் அதேவேளை கொழும்பு போதனா மருத்துவ மனையின் வைத்தியகலாநிதிகள்தமக்கு மாதாந்தம் 15 லீற்றர் பெற்றோலை இலவசமாகவும் இறக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தி.மு.க. ஆட்சி கவிழ்ப்பிற்கு கொழும்பு காரணமாம்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் வி சி. சுக்லா சிறிலங்கா ஜனாதிபதியை சந்தித்துப் பேசியதன் பின்னரே தி மு. க. அரசாங்கம் நீக்கப்பட்டது என சிறிலங்கா அரசாங்கமே தெரிவித்துள்ளது

நேற்றுமுன்தினம் வெளிவந்த கொழும்புப் பத்திரிகைகளில் இத்தகைய செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த புதன்கிழமை காலை பிரேமதாஸாவை வி. சி. சுக்லா சந்தித்து தமிழக விவகாரம் உட்பட இலங்கைப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியது தெரிந்ததே.

## 40வீதமான புத்தகங்களையே அரசு அனுப்பியுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு தேவை என யாழ். கல்வித்திணைக்களம் கேட்டுக் கொண்டதில் 40 வீத இலவச புத்தகங்களையே அரசு ஏற்றுக் கொண்டு அனுப்பி வைத்திருப்பதாக கல்வித்திணைக்களத்திலிருந்து குரல் தரவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது பருத்தித்துறைக்கு வந்திருக்கும் கப்பலில் இந்த புத்தகங்கள் எதிர்வரும் திங்களன்றே இறக்கப்படும் என தமக்கு உறுதியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றதாகவும் அவர் கூறினார். (லோ)

## வரிவிளம்பரம்

### கிளீக்கப் போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளையும், றோனியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனடியாக செய்து பெற்றுக்கொள்ள கிளீங்கட் 239 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (B-1958)

### தவறிவிட்டது

கிருஷ்ணசாமி நவரெட்ன ராஜா (பத்தர்) என்பவருடைய அடையாள அட்டை இல. 583470760X யாழ் பஸ் நிலையத்திற்கும் முனியப்பர் கோயிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது கிருஷ்ணசாமி பத்தர், வேலணை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (R-1068)

### போட்டோஸ்ரற்

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும் கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள். சித்ராலயா 351, கோயில்வீதி, நல்லூர். (கோயில் வீதியில் கம்பன் கோட்ட முன்பாக) (B/1941)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



| அன்னை மடியில் | | அந்நியர் அழிப்பில் |
|---|---|---|
| 07 - 11 - 1965 | | 02 - 02 - 1989 |

அஹிம்சைப் போராட்டத்தில் அந்நிய இராணுவத்தால் அழிக்கப்பட்ட எமது நண்பர்கள்

**தனபாலசிங்கம் சத்தியேந்திரா**
(மருத்துவபீட மாணவன்)

**சின்னத்தம்பி ஜெகநாதன்**
(விஞ்ஞானபீட மாணவன்)

ஆகியோரை நினைவு கூருகிறோம்


எங்கள் சுதந்திரம்
மறுக்கப்படுகையில்
சுதந்திரதேவியின்
பாதபூஜைக்காய்
சத்தியப்பூக்கள்
தானாய் மலரும்

மாணவ நண்பர்கள்
மருத்துவபீடம்.

(R- 1069)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி






## பாரதி கல்வி நிலையம்
சித்தன்கேணி

**SPOKEN ENGLISH**
**With GRAMMAR**
by Mr. BRITTO

புதிய 2ஆம் பிரிவு
ஆரம்பம்; 02-02-1991 (சனி 4-30 மணி)

இரசாயனவியல்
A/L 90, 91, 92 (சனி, ஞாயிறு 9-00 மணி)
ஆரம்பமாகிவிட்டன.

by Mr. RAMANATHAN

(B-1963)



## புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 92** இந்து நாகரிகம்
இந்திய வரலாறு (HISTORY)
2ஆவது புதிய பிரிவு
ஆரம்பம்: 03 - 02 - 1991

**A/L 90** வினா - விடை வகுப்பு
ஆரம்பம்: 06-02 1991 (10-00 மணி)

**A/L 91** DAY CLASSES
ஆரம்பமாகி நடைபெறுகின்றன.


ஆசிரியர்: திருமதி S. அருள்நங்கை
(B/1962)


## விருந்துபசாரமும் பாராட்டு விழாவும்

கலைமாணி (B. A) பரீட்சையில் நாம் சித்தியடைவதற்கு வழிகாட்டிகளாக இருந்து எமக்குதவிய விரிவுரையாளர்களையும், கல்லூரி நிர்வாகிகளையும் கௌரவிக்குமுகமாக இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலம்: 04 - 02 - 1991 திங்கள் காலை 9மணி.
இடம்: பட்டப்படிப்புகள் கல்லூரி





| அமரர் | அமரர் |
|---|---|
| சி. ஜெகநாதன் | த. சத்தியேந்திரா |
| (விஞ்ஞானபீடம்) | (மருத்துவபீடம்) |
| வையகத்தில: 19. 11. 1966 | 07. 11. 1965 |

வரலாற்றில்- 02. 02. 1989

நண்பா!

"அஹிம்சை வேள்வித்தியில்
ஆகுதியாகிவிட்ட தியாகதீபங்கள் நீங்கள்"

3 ஆம் வருட பௌதிகவிஞ்ஞான
மாணவர்கள்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

(R-1070)

---

உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிரமோதூத ஆண்டு தைத்திங்கள் 21ஆம் நாள் (3-2-199 ) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9—13 மணிமுதல் 10—30 மணிவரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் திருவளர் செல்வன் | எமது புத்திரி திருவளர் செல்வி |
|---|---|
| குணேஸ்வரன் (குணேஸ்) | நகுலாம்பிகை (நகுலா) |
| (உரிமை: நியூ ஆனந் தாஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்) | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமாங்கல்யதாரண வைபவத்தில் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளும் வண்ணம் வாடிக்கையாளர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்:- அன்று மாலை 4-00 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம்: தங்கள் நல்வரவை நாடும்

| திரு.திருமதி செ. பேரம்பலம் | திருமதி ச. அம்பலவாணர் |
|---|---|
| 52, வைமன் றோட், | (ஆயுள்வேத வைத்தியர்) |
| நல்லூர், | மட்டுவில் தெற்கு, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |

(இருவீட்டார் அழைப்பு)

(R-1067) வரவேற்பாளர்கள்: பே பரமேஸ்வரனும் சகோதரர்களும்

---

# விருந்துபசாரமும் பாராட்டு விழாவும்

கலைமாணி (B. A) பரீட்சையில் நாம் சித்தியடைவதற்கு வழிகாட்டிகளாக இருந்து எமக்குதவிய விரிவுரையாளர்களையும், கல்லூரி நிர்வாகிகளையும் கௌரவிக்குமுகமாக இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலம்: 04 - 02 - 1991 திங்கள் காலை 9மணி.
இடம்: பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இதுவரை தங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளாத இக்கல்லூரி மாணவர்களும் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விழா அமைப்புக்குழு.
பழைய மாணவர் ஒன்றியம்.
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B-1966)

---

# நினைவு கூருகின்றோம்!

## பெப்ரவரி 2

1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**வெள்ளை** (செ. ஜோண்குமார் - இளவாலை)

1988இல் அம்பாறையில் வீரமரணமடைந்த
**ஞானி** (செ. பாக்கியநாதன் - திராய்க்கேணி)

1989இல் கட்டை அடம்பன் என்ற இடத்தில் இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த
**கப்டன் ரூபன்** (கந்தசாமி - மண்டைதீவு)
**சேகர்** (ஞா. சின்னத்தம்பி - பாலம்பிட்டி, மன்னார்)

இதே ஆண்டு கொம்புவைத்த குளம் என்னுமிடத்தில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த
**செட்டி** (த. ரமேஸ்பாபு - வேப்பங்குளம்)
**ஜெரி**

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1907)

**★ சிந்தனைக்கு ★**

பொன்னைச் சோதிப்பது நெருப்பு!
வீரர்களைச் சோதிப்பது இன்னல்;
— செனெகா


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி யாழ்ப்பாணம். 02-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## அல்லலுறும் மக்களுக்கு ஆறுதலைத் தர.....

அரசவங்கி, கூட்டுத்தாபன, கூட்டுறவு, தனியார் நிறுவனங்களில் இடம்பெறும் மோசடிகள் ஊழல்கள். அதிகார துஷ்பிரயோகங்கள் என்பன பெரியளவில் நடைபெறுவதால் அவற்றைக் கட்டுப்படுத்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

இந்த அறிவிப்பானது, ஒரு வகையில் சந்தோசமாக இருப்பினும் வேறொரு வகையில் கவலையையும் வெட்கத்தையும் அளிக்கும் விடயமாகவே உள்ளது. தமிழர் விடுதலைப் போராட்டம் எவ்வளவோ நெருக்கடிகளின் மத்தியில் எதிர்நீச்சல் போட்டு முன்னேறிக்கொண்டிருக்கின்றது. சிறிலங்காவின் பொருளாதாரத் தடையினாலும், இராணுவ நடவடிக்கையினாலும் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு துயர் உற்றுள்ளனர். இந்நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அரச, தனியார் நிறுவனங்கள் மோசடிகளிலும், அதிகார துஷ்பிரயோகங்களிலும் ஈடுபடுதல் வேதனை அளிக்கும் விடயம் என்பதில் சந்தேகமெதுவுமில்லை.

இன்றையநிலையில், மக்கள் இன்னல் உறுகின்றார்கள் என்பதனால், அரச தனியார் நிறுவனங்களிடம் இருந்து மக்கள் பல்வேறு சேவைகளை எதிர்பார்த்திருக்கின்றார்கள். அவ்வாறு மக்கள் எதிர்பார்ப்பதிலும் தவறேதும் இல்லை ஏனெனில் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யவும், அவர்களுக்குச் சேவை செய்யவுமே இந்த நிறுவனங்கள் இயங்குகின்றன. அத்தோடு மக்களின் வரிகளிலும், மக்களின் உழைப்பிலுமே இந்த நிறுவனங்கள் செயற்படுகின்றன

இந்த நிலையில் மக்களுக்கு இந்த நிறுவனங்கள் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட சேவைகளை வழங்காமல் விடுவதும், அதிகாரத்தை வேறு வழியில் துஷ்பிரயோகம் செய்வதும் தவறாகும். எடுத்துக்காட்டாக இன்று பல அரச தனியார் நிறுவனங்கள் சில சாக்குப் போக்குக் காரணங்களைச் சொல்லி தமது கடமையைச் செய்வதில் பின் நிற்கின்றன. அதாவது அதிகாரங்கள் இருந்தும் சேவை செய்வதில் பின் நிற்கின்றன. சில நிறுவன அதிகாரிகள் தமது அதிகாரங்களை தமது சுயநலத்திற்காகவும் அதைப் பயன்படுத்துகின்றார்கள். எடுத்துக்காட்டாக நிவாரணப் பொருள் விநியோகத்தில் பல்வேறு மோசடிகளில் அதிகாரிகள் ஈடுபட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் சில அதிகாரிகள் தமது பதவி உயர்வு என்பதை மட்டுமே கருத்திற்கொண்டு பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு தப்பிக்கொள்ளப் பார்க்கின்றார்கள்.

பொதுவாகவே, அமைதியான காலங்களில்கூட அரச நிறுவனங்களில் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் நடைபெறுவது வழமையான நிகழ்வுதான் ஆனால் யுத்த காலங்களில் உள்ளது போன்று பெரியளவில் நடைபெறும் வாய்ப்புக்குறைவாகும். ஏனெனில் அரச இயந்திரம் சீராக இயங்கிக்கொண்டிருப்பதால் அவை ஓரளவு கட்டுப்படுத்தப்படுகின்றது. அதேவேளை வேலியே பயிரை மேயும் சந்தர்ப்பங்களும் உண்டு.

## உடைந்த வீடுகளில் உடையாத உள்ளங்கள்

பேராசிரியர் சிவத்தம்பி வீட்டை சுற்றிப் பார்த்தோம். புத்தகங்கள் சிதறிக் கிடந்தன. அவற்றில் சிலவற்றை புரட்டினோம். மார்க்சிசத்துக்கும் அவருக்கும் தொடர்பு இருந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்து அங்கிருந்து வெளியேறினோம். கெருவில் மின்சாரக் கம்பிகளினிடையே வலைகள் பின்னிக் கிடந்தன வௌவால் பிடிப்பதற்கு இந்த மாதிரியும் வலை கட்டுகிறார்களோ என்று எண்ணினோம். பின்னர் தான் தெரிந்தது மூன்று வீட்டிற்கு அப்பால் தொழில் முடிந்து வீட்டில் கொண்டு வந்து வைத்த வலைகள் பொம்பர் அடியின் வேகத்தில் பறந்து போய் மின்சாரக் கம்பிகளினுள் சிக்கியிருப்பதை தெரிய முடிந்தது. அங்கே நடந்தவற்றை விசாரிக்கத் தொடங்கினோம். அதற்கு முன் நடந்த சம்பவங்கள் பற்றி வல்வை றோ. க. பாடசாலை மாணவி தனது பிஞ்சுக் கரங்களால் எழுதியவற்றை அப்படியே (எழுத்துப் பிழைகளுடன் திருத்தாமல்) தருகிறேன். வல்வைப் படுகொலைகளை எழுதியவள் சந்திரராஜின் மகள் இவர்;

### உண்மைச் சம்பவம்

## இலங்கை ஆமி செய்த அட்டூளியங்கள்

ஒரு ஞாயிற்றுக்கிழமை நான் தனியார் கல்வி நிலயத்திற்குச் சென்று திரும்பி வந்தேன அப்பொழுது ஒரு ஹெலி கொப்டர் வந்து ஒரு துண்டுப்பிரசுரம் போட்டு விட்டுச் சென்றது, அதில் கிடந்தது தான் இது வல்வெட்டித்துறை வாசிகளுக்கு எச்சரிக்கை.

மக்கள் அனைவரும் உங்கள் உடமைகளைக் கொண்டு 48 மணத்தியாளத்திற்கிடையில் நீங்கள் வெளி ஏற வேண்டும். என்று இனிய தமிழில் எழுதிப் போட்டான். நான் உடனே எனது அப்பாவிடம் சென்னேன் அப்பா அதை நம்பவில்லை நீ போய் ஒரு துண்டு வாங்கி வா என்று சென்னார் நான் பேய் வில்வறாச் வீதிக்குச் சென்று வாங்கி வந்தேன் அப்பா அதை வாசித்து விட்டுக் கேட்டார் இதை எங்கே வாங்கி வந்தாய் என்று கேட்டார். நான் வில்வறாச் வீதியில் வாங்கி வந்தேன். சரி நானும் வருகிறேன் வா என்று என்னை அழைத்துச் சென்றார். அவர்களைக் கேட்டார் "நீங்கள் இந்த ஊரை விட்டுப் போகப் போகுறீர்களா"? என்று கேட்டார் "நாங்கள் இந்த ஊரை விட்டு எங்கே போவது" என்று பதில் சென்னார்கள். தங்களுக்கு ஒரு இடமும் போவதில்லை என்று கூறி விட்டு அப்பா வீட்டுக்கு வந்தார். என்னும் சிலமணி நேரத்தில் ஏதோ இரச்சல் ஒன்று கேட்டது பக்கத்து வீட்டுப் பெடியன் நன்கு பொம்மர் என்று கத்திக் கொண்டு எங்கள் வீட்டு பங்கருக்குள் புகுந்தான் வந்ததும் முதல் முதலாக கடலுக்குள் பட்டது இந்த நான்கு பொம்மர் போட்டு கட்டிடம் ஒருத்தர் வீடுகள் சேதம் அடைந்தன. அதுகள் போனதும் இரண்டு சகடை வந்தது அது போட்ட குண்டுகளால் கிட்டத்தட்ட 30 வீடுகள் சேதம் அடைந்தது. அதன் பின்னால் ஒரு ஹெலி கொப்டர் வந்தது அப்பொழுது தனியார் கல்வி நிலயத்தில் இருந்து அப்பா 50 மாணவர்களைக் கூட்டி வந்தார் அப் பொழுது தனியார் கல்வி நிலையத்தில் ஒரு குண்டு விழுந்தது என்று சென்னார்கள் அந்த பல சைக்கிள்கள் சுக்கு நூறாக இருந்தது சௌகுதிகள மரங்களின் தென்னை அடுத்ததாவது எனது சித்தப்பா வீட்டில் விழுந்தது அவர் வீடு ஓர் மாடி வீடு அவர் வீடு மூன்று அடி அழவில் தாள இருந்தது அது ஓர் நம்பமுடியாத காரியம் அவரும், அவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் பங்கருக்குள் இருந்தார்கள், அவர்களது பங்கர் மூடப்பட்டுவிட்டது ஆனால் அவர்கள் ஒரு மாதிரி கிண்டி வெளியே வந்து விட்டார்கள் என்னும் ஒருவர் அவர்கள் வீட்டுக்குள் இருந்தார் அப்போதல் சுவர்கள் விழுந்து விட்டது ஆனால் அவர் சாகவில்லை அவரை அப்பா மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றார்கள் அதற்குப் பிறகு கோயிலில் குண்டு விழுந்தது அம்மன் கோயில் சிவன் கோயில் இரண்டு கோவிலும் சேதம் அடைந்தது.

அதற்குப பிறகு நான் புட்டளைக்குச் சென்றுவிட்டேன் எனது அப்பாவும் அம்மாவும் அன்று இரவு தங்கி அடுத்தநாள் காலையில் புட்டலைக்கு வந்தார்கள். நான் எனது அம்மாவைக் கேட்டேன் எத்தனை வீடுகள் சேதம் அடைந்தது என்று கேட்டேன்; எனது அம்மா சென்னார் சேதம் அடைந்த வீடுகள் எண்ண முடியாது. சேதம் அடைந்த வீடுகள்தான் எண்ணலாம் என்று கூறினார். அன்று பின்நேரம் எனது அப்பாவும் எனது அம்மாவும் ஊருக்கு வந்தார்கள். சில சாப்பாட்டுச் சாமானகளை எடுத்து வந்தார்கள்;

மூன்றாவதாம் நாள் காலை தொடக்கம் பின்னேரம் வரை ஐந்தாறு தரம் அவ்ரோ விமானங்கள் பாரிய குண்டுகளை வீசியது. நாங்கள் புட்டளையில் எந்த வீடுகள் சேதமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம.

நான்காம் நாள் காலையில் மூன்று பொம்மறும் ஒரு அவ்ரோவிமானமும் பீப்பாக் குண்டுகளைத் தள்ளியது. நாங்கள் இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தோம் மத்தியானம் உச்சி வெய்யில் நேரம் எங்கள் உடைய அப்பா வீட்டுக்கு வந்து கோழிகளுக்குச் சாப்பாடு வைத்துவிட்டு திரும்பி வந்தார் பின்னேரம் ஒரு சத்தமும் கேற்கவில்லை.

ஐந்தாம்நாளும் ஒரு சத்தமும் கேற்கவில்லை. எனது அப்பாவும். அம்மாவு மாமாவும் ஊருக்கு வந்தார்கள் ஆறுமணியில் மாமாமட்டும் புட்டலைக்கு வந்தார் நாங்கள் அம்மாவும் அப்பாவும் எங்கே என்று கேட்டோம்; அதற்கு அவர் அவர்கள் அங்கே தங்கி விட்டார்கள் என்று சென்னார்.

ஆறாம் நாள் வீட்டே வந்துவிட்டோம்: வீட்டில் பெரிய ஷெல் துண்டுகளை நானும் எனது மச்சாலும் எங்கள் வீட்டி சேகரித்தோம். பின்னேரம் நானும் எனது அக்காவும் கொண்டக்கட்டையில் உள்ள சின்னமாமா வீட்டுக்குச் சென்றோம. வீட்டின் முன்னால் பெரிய பீப்பா ஒன்று விழுந்திருந்தது. அங்கே நெருக்கமான வீடுகள் என்ற படியால் ஐந்தாறு வீடுகள் சேதம் அடைந்தன. சின்ன மாமா வீடு முற்றாகச் சேதம் அடைந்தது.

மத்தியில் எதிர்நீச்சல் போட்டு முன்னேறிக்கொண்டிருக்கின்ற இறிலங்காவின் பொருளாதாரத் தடையினாலும், இராணுவ நடவடிக்கையினாலும் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு துயர் உற்றுள்ளனர். இந்நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அரச, தனியார் நிறுவனங்கள் மோசடிகளிலும், அதிகார துஷ்பிரயோகங்களிலும் ஈடுபடுதல் வேதனை அளிக்கும் விடயம் என்பதில் சந்தேகமெதுவுமில்லை.

இன்றைய நிலையில், மக்கள் இன்னல் உறுகின்றார்கள் என்பதனால், அரச தனியார் நிறுவனங்களிடம் இருந்து மக்கள் பல்வேறு சேவைகளை எதிர்பார்த்திருக்கின்றார்கள். அவ்வாறு மக்கள் எதிர்பார்ப்பதிலும் தவறேதும் இல்லை ஏனெனில் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யவும், அவர்களுக்குச் சேவை செய்யவுமே இந்த நிறுவனங்கள் இயங்குகின்றன. அத்தோடு மக்களின் வரிகளிலும், மக்களின் உழைப்பிலுமே இந்த நிறுவனங்கள் செயற்படுகின்றன

இந்த நிலையில் மக்களுக்கு இந்த நிறுவனங்கள் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட சேவைகளை வழங்காமல் விடுவதும், அதிகாரத்தை வேறு வழியில் துஷ்பிரயோகம் செய்வதும் தவறாகும். எடுத்துக்காட்டாக இன்று பல அரச தனியார் நிறுவனங்கள் சில சாக்குப் போக்குக் காரணங்களைச் சொல்லி தமது கடமையைச் செய்வதில் பின் நிற்கின்றன. அதாவது அதிகாரங்கள் இருந்தும் சேவை செய்வதில் பின் நிற்கின்றன. சில நிறுவன அதிகாரிகள் தமது அதிகாரங்களை தமது சுயநலத்திற்காகவும் அதைப் பயன்படுத்துகின்றார்கள். எடுத்துக்காட்டாக நிவாரணப் பொருள் விநியோகத்தில் பல்வேறு மோசடிகளில் அதிகாரிகள் ஈடுபட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் சில அதிகாரிகள் தமது பதவி உயர்வு என்பதை மட்டுமே கருத்திற்கொண்டு பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு தப்பிக்கொள்ளப் பார்க்கின்றார்கள்.

பொதுவாகவே, அமைதியான காலங்களில்கூட அரச நிறுவனங்களில் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் நடைபெறுவது வழமையான நிகழ்வுதான் ஆனால் யுத்த காலங்களில் உள்ளது போன்று பெரியளவில்நடைபெறும் வாய்ப்புக்குறைவாகும். ஏனெனில் அரச இயந்திரம் சீராக இயங்கிக்கொண்டிருப்பதால் அவை ஓரளவு கட்டுப்படுத்தப்படுகின்றது. அதேவேளை வேலியே பயிரை மேயும் சந்தர்ப்பங்களும் உண்டு.

ஆனால் இன்று தமிழ் பிரதேசங்களில் தோன்றியுள்ள யுத்த நிலைவரம் போன்ற நெருக்கடியான கால சட்டங்களில் மோசடிகள் அதிகார துஷ்பிரயோகங்கள் நிகழ்வதற்குரிய வாய்ப்புக்கள் உயர்வாகவுள்ளது. ஏனெனில் இவற்றிற்கு ஓரளவு தடையாக இருந்த அரச இயந்திரம் முற்றாகச் செயலிழந்துவிடுகின்றது. இதனால் அதிகாரிகளின் தம் விருப்பத்திற்கான செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. இதனால்மோசடிகளும் அதிகரிக்கின்றன. இதனால் இந்த நிறுவனங்களின் நோக்கங்கள், செயற்பாடுகள் என்பன மாறிவிடுகின்றன.

இந்த நிலையில், அதிகார துஷ்பிரயோகம், மோசடிகளில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்துவது மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களின் கடமையாகின்றது. இதனால் தமது கடமைகளை மறந்தவர்களுக்கு தமது கடமையை ஞாபகமூட்டுவதும், துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு தண்டனை வழங்குவதும் தவிர்க்கமுடியாததாகி விடுகின்றது.

அதை வாசித்து விட்டுக் கேட்டார் இதை எங்கே வாங்கிவந்தாய் என்று கேட்டார். நான் வில்வராச் வீதியில் வாங்கி வந்தேன். சரி நானும் வருகிறேன் வா என்று என்னை அழைத்துச் சென்றார். அவர்களைக் கேட்டார் "நீங்கள் இந்த ஊரை விட்டுப் போகப் போகிறீர்களா"? என்று கேட்டார் "நாங்கள் இந்த ஊரை விட்டு எங்கே போவது" என்று பதில் சொன்னார்கள். நாங்களும் ஒரு இடமும் போவதில்லை என்று கூறி விட்டு அப்பா வீட்டுக்கு வந்தார். என்னும் சிலமணி நேரத்தில் ஏதோ இரைச்சல் ஒன்று கேட்டது பக்கத்து வீட்டுப் பெடியன் நன்கு பொம்மர் என்று கத்திக் கொண்டு எங்கள் வீட்டு பங்கருக்குள் புகுந்தான் வந்ததும் முதல் முதலாக கடலுக்குள் போட்டது இந்த நான்கு பொம்மர் போட்டு கட்டித் தட்ட ஒருத்தர் வீடுகள் சேதம் அடைந்தன. அதுகள் போனதும் இரண்டு சகடை வந்தது அது போட்ட குண்டுகளால் கிட்டத்தட்ட 30 வீடுகள் சேதம் அடைந்தது. அதன் பின்னால் ஒரு ஹெலி கொப்டர் வந்தது அப்பொழுது தனியார் கல்வி நிலையத்தில் இருந்து அப்பா 50 மாணவர்களைக் கூட்டி வந்தார் அப் பொன்னரி தனியார் கல்வி நிலையத்தில் ஒன்று விழுந்தது என்று சொன்னார்கள் அந்த பல சைக்கிள்கள் சுக்கு நூறாக இருந்தது தென்னங்குலைகள் மரங்களில் தென்னை அடுத்ததாவது எனது சித்தப்பா வீட்டில்விழுந்தது அவர் வீடு ஓர் மாடி வீடு அவர் வீடு முற்றாக அடி அழிந்து தரை இருக்கிறது அது ஓர் நம்பமுடியாத காரியம் அவரும், அவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் பங்கருக்குள் இருந்தார்கள், அவர்களது பங்கர் மூடப்பட்டுவிட்டது ஆனால் அவர்கள் ஒருமாதிரி வெட்டி வெளியே வந்துவிட்டார்கள் என்னும் ஒருவர் அவர்கள் வீட்டுக்குள் இருந்தார் அவர் மேல் சுவர்கள் விழுந்துவிட்டது ஆனால் அவர் சாகவில்லை இவரை அப்பா மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றார்கள் அதற்குப் பிறகு கோயிலில் குண்டு விழுந்தது அம்மன் கோயில் சிவன் கோயில் இரண்டு கோவிலும் சேதம் அடைந்தது.

அதற்குப் பிறகு நான் புட்டளைக்குச் சென்றுவிட்டேன் எனது அப்பாவும் அம்மாவும் அன்று இரவு தங்கி அடுத்தநாள் காலையில் புட்டளைக்கு வந்தார்கள். நான் எனது அம்மாவைக் கேட்டேன் எத்தனை வீடுகள் சேதம் அடைந்தது என்று கேட்டேன். எனது அம்மா சொன்னார் சேதம் அடைந்த வீடுகள் எண்ண முடியாது. சேதம் அடையாத வீடுகளைத்தான் எண்ணலாம் என்று கூறினார். அன்று பின்னேரம் எனது அப்பாவும் எனது அம்மாவும் ஊருக்கு வந்தார்கள். சில சாப்பாட்டுச் சாமான்களை எடுத்து வந்தார்கள்.

மூன்றாவது நாள் காலை தொடக்கம் பின்னேரம் வரை ஐந்தாறு தரம் அவ்ரோ விமானங்கள் பாரிய குண்டுகளை வீசியது. நாங்கள் புட்டளையில் எந்த வீடுகள் சேதமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம்.

நான்காம் நாள் காலையில் மூன்று பொம்மரும் ஒரு அவ்ரோவிமானமும் பீப்பாக் குண்டுகளைத் தள்ளியது. நாங்கள் இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தோம் மத்தியானம் உச்சி வெய்யில் நேரம் எங்கள் உடைய அப்பா வீட்டுக்கு வந்து கோழிகளுக்குச் சாப்பாடு வைத்துவிட்டு திரும்பி வந்தார் பின்னேரம் ஒரு சத்தமும் கேட்கவில்லை.

ஐந்தாம்நாளும் ஒரு சத்தமும் கேட்கவில்லை. எனது அப்பாவும், அம்மாவும் மாமாவும் ஊருக்கு வந்தார்கள் ஆறுமணியளவில் மாமாமட்டும் புட்டளைக்கு வந்தார் நாங்கள் அம்மாவும் அப்பாவும் எங்கே என்று கேட்டோம். அதற்கு அவர் அவர்கள் அங்கே தங்கி விட்டார்கள் என்று சொன்னார்.

ஆறாம் நாள் வீட்டை வந்துவிட்டோம்; வீட்டில் பெரிய ஷெல் துண்டுகளை நானும் எனது மச்சாளும் எங்கள் வீட்டில் சேகரித்தோம். பின்னேரம் நானும் எனது அக்காவும் கொண்டக்கட்டையில் உள்ள சின்னமாமா வீட்டுக்குச் சென்றோம். வீட்டின் முன்னால் பெரிய பீப்பா ஒன்று விழுந்திருந்தது. அங்கே நெருக்கமான வீடுகள் என்றபடியால் ஐந்தாறு வீடுகள் சேதம் அடைந்தன. சின்ன மாமா வீடு முற்றாகச் சேதம் அடைந்திருந்தது. பின்பு நான் வீட்டுக்கு வந்துவிட்டேன், யார்தான் இந்த இலங்கை அரசின் அட்டூழியங்களைக் கேட்கப் போகிறார்கள்.

அ: கல்யாணி
வல்வை றோ. க. பாடசாலை.

இந்த முறை நடைபெற்ற தாக்குதல் இதற்கு முன்னர் நடைபெற்றவைகளை விட வித்தியாசமானது. இவ்வளவு காலமும் நடந்த அழிவுகள் தரையால், கடலால் முன்னேறிய இராணுவத்தினரால் ஏற்பட்டன. இம்முறை ஆக்கிரமிப்பாளர்களின் ஒரு காலடி கூட இந்த மண்ணில் பதியவில்லை அதாவது பதிக்க முடியவில்லை. அந்தளவுக்கு எமது போராட்டம் வளர்ச்சியடைந்துள்ளது. தரையால் நடந்து வரவோ, தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தவோ முடியாத இந்த மண்ணில் ஏன இப்படியான அழிவுகளை மேற்கொள்ள வேண்டும்?

அதற்கான காரணம் வெள்ளிடை மலையானது. இது இயலாமையின் வெளிப்பாடு. கொண்டச்சி, கொக்காவில், கோட்டை, மாங்குளம் என்று தொடர்ச்சியாக தனது முகாம்களை இழந்து அங்கு பெற்ற படுதோல்விகளை சகிக்க முடியாமல் இம்மாதிரியான நடவடிக்கையில் ஈடுபடுகிறது.

அதைவிட தலைவர் பிரபாகரன் பிறந்த மண் இது என்பதால் ஏற்பட்ட காழ்ப்புணர்வின் வெளிப்பாடு இது. இடிந்த கட்டடங்களைப் பார்க்கும் போது சித்திரன் ஆசிரியர் அவர்கள் அடிக்கடி கூறும் விடயம் ஞாபகத்துக்கு வந்தது. தரப்படுத்தலில் தொடங்கி இன்று தரைப்படுத்தலில் நிற்கிறது அரசு என்பார். அதைத்தான் வல்வையின் காட்சிகள் உணர்த்துகின்றது.

(தொடரும்)

# சைக்கிளில் செல்லத் தடை

வவுனியா இராமபுரப் பகுதிகளிலிருந்து நகரப்பகுதியை நோக்கிச் செல்வோர் சைக்கிள்களில் பயணம் செய்வது இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் நகரப்பகுதியை நோக்கிச் சைக்கிள்களில் செல்வது இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தபால்சேவகர்கள் சைக்கிள்களில் செல்லலாம் என்றும் காலை 9.00 மணிக்கு முன்னர் இவர்கள் தமது அலுவலகத்திற்குச் சென்று தாள்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இராணுவத்தினரால் கூறப்பட்டுள்ளது.

தவிர நெருப்பில் உருகக் கூடிய பிளாஸ்டிக் போன்ற பொருள்கள் வவுனியா நகரப் பகுதிகளில் விற்பனை செய்வதோ அல்லது கொள்வனவு செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. (நி)

# நுணாவில் வர்த்தகர் வீட்டில் 2லட்சம் ரூபா கொள்ளை

(கொடிகாமம்)

நுணாவில் மேற்கில் வசிக்கும் ஒரு வர்த்தகரின் வீட்டில் திங்கட் கிழமை இரவு நகை பணம் உட்பட சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இனம் தெரியாத நபர்களினால் கொள்ளை அடிக்கப்பட்டது.

இப் பொருள்களில் தாலிக் கொடி, சங்கிலி, காப்பு உட்பட 20 தங்கப் பவுண் பெறுமதியானது. ரொக்கப்பணம் அறுபதினாயிரம் என கூறப்படுகின்றது

இக் கோஷ்டியில் நால்வர் வீட்டில் புகுந்ததாகவும் வீட்டுக்காரரை மிரட்டி இவற்றை கொள்ளை அடித்ததாக கூறப்படுகின்றது. (86)

# திருட்டு

தெல்லிப்பளைப் பகுதியில் ஒரு இரவில் மூன்று வீடுகளில் கதவு உடைக்கப்பட்டுப் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

நாகரட்ணம், ராஜரட்ணம், வேலாயுதம் ஆகியோரது வீடுகளிலேயே கடந்த புதன்கிழமை இரவு கதவுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த உடுபுடவைகள், பலசரக்குப் பொருள்கள் ஆகியவை திருடப்பட்டுள்ளன. (ச)

# தி. மு. க. ஆட்சிக் கலைப்பிற்கு நான் பரிந்துரைக்கவில்லை

**- பர்னாலா**

(சென்னை)

தமிழ்நாட்டில் நெருக்கடி நிலைமை தோன்றி வலுவடைந்ததால் அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்த வேண்டியிருந்தது என்று உள்துறை இணை அமைச்சர் சுபாத்கான் கூறியிருக்கிறார்.

ஆர்ப்பாட்டங்களை வன்செயல்களில் ஈடுபட வேண்டாம் என்றும், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்க வேண்டாம் என்றும் தமிழக ஆளுநர் பர்னாலா பொது மக்களைக் கேட்டுள்ளார். சென்னையில் செய்தியாளரைச் சந்தித்த சமயம் அவர் இந்த வேண்டுகோளை நேற்று விடுத்தார்.

மாநிலத்தின் சட்ட ஒழுங்கு நிலைமைபற்றி ஆலோசகர் கார்த்திகேயன் மற்றும் உயர் அதிகாரிகளுடன் நேற்று பர்னாலா ஆலோசனை நடத்தினார்.

குடியரசுத்தலைவர் ஆட்சி தமிழகத்தில் அமுல் செய்யப்பட்டது தொடர்பாக பர்னாலா கருத்துத் தெரிவிக்கையில் மத்திய அரசுக்கு தான் எந்தவிதத் தகவலையும் அனுப்பவில்லை என்றார். குடியரசுத் தலைவர் ஆட்சியை தமிழ்நாட்டில் பிரகடனப்படுத்தியது டில்லியின் முடிவே என்றும் மேலும் தெரிவித்தார் மனச்சாட்சியுடன் தான் செயற்பட்டதாகவும் அதனால் தான் பதவி விலகுவதற்கான எவ்வித யோசனையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். மத்திய அரசு எடுத்த முடிவைப்பற்றித் தான் கருத்துக்கூற முன்வரவில்லை என்றும், தமது பணியைத் தொடர்ந்து செய்ய இருப்பதாகவும் அவர் கூறினார்.

மாநில மக்கள் வன்முறை அரசியலை வெறுத்தனர் இப்போது குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டபிறகு அவர்கள் மகிழ்ச்சிகரமாக இருப்பதாக ஆளுநர் பர்னாலா அறிக்கை அனுப்பியுள்ளதாக மத்திய அரசின் உள்துறை இணை அமைச்சர் சுபாத்கான் தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர் ஆட்சி அமைப்பதற்கு ஆளுநரின் ஆலோசனைக்காகக் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை என்றும், பலவேறு மட்டங்களிலும், அமைச்சரவையிலும் நன்கு விசாரித்தபிறகு தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் தவிர வேறு சமூக விரோத சக்திகளும் தொடர்ந்து வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டதாலும்; அதனால் நாட்டுக்குத் தீமை ஏற்படாதிருக்க தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டதாகவும் சுபாத்கான் மேலும் தெரிவித்தார்.

## தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி கவிழ்ப்பிற்கு எதிராக புதன்கிழமை எதிர்ப்பு நாள்

(சென்னை)

திராவிட முன்னேற்றக்கழக அமைச்சரவையை பதவி நீக்கம் செய்ததை ஆட்சேபித்து எதிர்வரும் புதன்கிழமை தமிழகம் முழுவதும் எதிர்ப்பு நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தோழமைக் கட்சிகளும் சேர்ந்து எதிர்ப்பு நாள் அனுஷ்டிக்கின்றன. இந்தத் தீர்மானம் நேற்று முன்தினம் மு. கருணாநிதி தலைமையில் நடந்த தி. மு. க. கட்சியின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை தி. மு. க. அரசாங்கத்தை பதவிநீக்கம் செய்ததை வரவேற்கும் வகையில் நேற்று தமிழகம் முழுவதிலும் வரவேற்பு விழாக்கள் நடைபெற்றன. இதனை ஒழுங்குபடுத்திய தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும், கருப்பையா மூப்பனாரும் தொடர்ந்தும் இது நிகழ்ச்சிகள் இடம் பெறும் எனத் தெரிவித்தனர்.

### மின்சாரம்

அனுப்பி வைக்கப்பட்ட அதிகாரிகளிடமிருந்து மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்காததால் வடபகுதிக்கு மின்சாரம் வருவதற்கு எடுக்கும் கால எல்லையை குறிப்பாகக் கூற முடியாதுள்ளது என்று அவ்வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. இந்தத் தகவலை வெளியிட்ட வட்டாரங்கள் தயவுசெய்து எமது பெயர்களையோ, பதவிகளையோ தெரிவிக்க வேண்டாமென மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டன.

## 16 ஆம் நாள் போர்

★ போர் தொடங்கியபின் வளைகுடா நெருக்கடி பற்றி விவாதிக்க மறுத்துவந்த ஐ. நா. பாதுகாப்புச்சபை நேற்று அது தொடர்பான விவாதத்தை ஆரம்பித்துள்ளது.

★ வளைகுடாப்போர் மேலும் பரவிப் பெருகுவதை எதிர்ப்பதாக சோவியத் யூனியன் மீண்டும் அறிவித்துள்ளது. இப்போது நடக்கும் யுத்தப் போரின் மிக அபாயகரமான கட்டம் வரம்பு கடந்து விடக்கூடாது என்று அது அமெரிக்காவையும் ஈராக்கையும் கேட்டுள்ளது.

★ ரியூனிசியாவில் 1000க்கணக்கான மக்கள் ஈராக்கிய படைவீரர்களுக்கு ரத்ததானம் வழங்க முன்வந்தனர்

★ சவூதி-குவைத் எல்லையில் சுமார் 500க்கும் 1000க்கும் இடைப்பட்ட தாங்கிகள் சகிதம், சவூதிக்குள் 65 000 ஈராக் படைகள் நகர்வதாக கூட்டணிப் படைகளின் தளபதி கூறியுள்ளார். அதேவேளை இந்த எல்லைப்பகுதியில் நின்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைன் தமது படையினருக்கு நேரடியாக உத்தரவு பிறப்பித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ இஸ்ரேல் மீது மீண்டும் ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது நேற்று முன்தினம் இரவு இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது பாலஸ்தீனத்தின் பகுதியில் விழுந்ததாகவும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது ஸ்கட் ஏவுகணையை எதிர்த்து அமெரிக்காவின் பெற்றியாட் ஏவுகணையும் செலுத்தப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

★ அமெரிக்காவும் அதன் கூட்டுப் படைகளும் தொடர்ந்து சண்டையில் ஈடுபட்டுவருவதாக அமெரிக்கா அறிவித்தது சவூதி அரேபியாவில் 160 ஈராக்கிய ராணுவத்தினரை 3 நாட்களில் கைதிகளாக பிடித்துள்ளனர் என்றும் அமெரிக்க வீரர்கள் 11 பேரைக் காணவில்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

★ ஈராக் உட்பட நான்கு நாடுகளின் உயர் மட்ட பிரதிநிதிக் குழுக்கள் வளைகுடாப் போருக்கு முடிவு காண்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஈரான் சென்றுள்ளன. ஈரான், அல்ஜீரியா யேமன் மற்றும் வட ஆபிரிக்க நாடுகளும் இதில் அடங்கும்.

★ சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஈராக்கிற்கு மனிதாபிமான முறையில் முதல் வது மீட்புப்பொருள்களை அனுப்பியுள்ளது இதேவேளை விரைவில் மருந்து, போர்வைகள் மற்றும் உணவுப்பொருள்களை அனுப்ப முடிவு செய்துள்ளது.

### இதோபணம்

குமதி வரிகள் எதுவும் அற்ற முறையில் காரி ஒன்றையும் தரும்படி சுகாதார அமைச்சை கோரியுள்ளனர்.

மேற்படி தமது கோரிக்கை தொடர்பாக குறிப்பிட்ட கால எல்லைக்குள் பதில்தரும்படி சுகாதார அமைச்சுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்

ஒரே பல்கலைக் கழகத்தில் ஒரே மருத்துவ பாடத்திட்டத்தின் கீழ் கல்விகற்ற வெவ்வேறு மாவட்ட போதனா மருத்துவ மனைகளின் வைத்தியக் கலாநிதிகளுக்கு இவ்வாறான அவநிலை ஏற்பட்டிருக்கிறது. (அ)

### ஆனையிறவு

செல்வம் ஸ்ரோர்ஸில் விழுந்ததில் கடைமுற்றாக சேதம

### பதுக்கல் மீட்பு

சாவகச்சேரிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நகரப் பொறுப்பாளர் தலைமையில் திடீர்ச்சோதனைக் குழுவினர் தேடுதல் வேட்டை நடத்தியபொழுது பதுக்கி வைக்கப்பட்ட பல பொருள்கள் மீட்கப்பட்டன. சங்கத்தானையில் 2 மூடைசீனி 8 பரல் தேங்காயெண்ணெய் 1 பெட்டி சன்லைட் ஆகியனவும், கச்சாய் வீதியில் 3 பரல் மண்ணெண்ணெயும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. சாவகச்சேரி சந்தைக்குள் 1 சன்லைட் சோப் 13ரூபாவிற்பனை செய்த வியாபாரியிடமிருந்து 64 சோப்புகள் கைப்பற்றப்பட்டன. இவை அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குமேற்படி பிரதேசப்

## மரண அறிவித்தல்கள்

குரும்பசிட்டி

**முத்தையா சபாரத்தினம்**

ஈவினாகம் திருமகள் அழுத்தக முன்னாள் முகாமையாளரும், தலைக்குமி புத்தகசாலை அதிபரும், குரும்பசிட்டி சன்மார்க்கசபைக் காப்பாளருமாகிய முத்தையா சபாரத்தினம் (01-02-91) நேற்றுக் காலமானார்.

# மரண அறிவித்தல்கள்

## குரும்பசிட்டி
## முத்தையா சபாரத்தினம்

வல்வாகம் திருமகள் அழுத்தக முன்னாள் முகாமையாளரும், தலைக்குமி புத்தகசாலை அதிபரும், குரும்பசிட்டி சன்மார்க்கசபைக் காப்பாளருமாகிய முத்தையா சபாரத்தினம் (01-02-91) நேற்று காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01 02 91 (நேற்று) பிற்பகல் 5 மணியளவில் நடைபெற்றது. இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 14, உடையார் லேன், கந்தர்மடம். குடும்பத்தினர்.

(R/1074)

## வீரவேங்கை மேஜர் கௌரி
### (சதானந்தன் அனுதீபன்)

சதானந்தன் அனுதீபன் 26-01-1991 சனிக்கிழமை வீரமரணமடைந்தார். இவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர்களும், மன்னார் வட்டக்கண்டல் வாசிகளுமான பொ. சதானந்தன் — இராசம்மா தம்பதிகளின் அருமை மகனும், அனுராஜ் (கனடா), அனுஜயன் (யாழ். இந்திய கல்லூரி முறைசாராக் கல்வி மாணவன்), கௌரி (மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்டிலிப்பாய் திருமதி க. செல்வரத்தினத்தின் பேரமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27 01. 1991 ஞாயிற்றுக்கிழமை வட்டக்கண்டலில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வட்டக்கண்டல், மன்னார். பொ. சதானந்தன்

(R/ 1073)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### மின்சாரம்

அனுப்பி வைக்கப்பட்ட அதிகாரிகளிடமிருந்து மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்காததால் வடபகுதிக்கு மின்சாரம் வருவதற்கு எடுக்கும் கால எல்லையை குறிப்பாகக் கூற முடியாதுள்ளது என்று அவ்வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. இந்தத் தகவலை வெளியிட்ட வட்டாரங்கள் தயவுசெய்து எமது பெயர்களையோ, பதவிகளையோ தெரிவிக்க வேண்டமென மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டன.

இதேவேளை வடபகுதிக்கு மின்சாரம் கொண்டுவருவதில் உள்ள நடைமுறைச்சிக்கல் பற்றி யாழ். மாவட்ட மின்சாரசபை பிரதேச முகாமையாளரிடம் விளக்கம் கேட்டபோது, இதுபற்றி எம்மால் எதுவும் இப்பொழுது கூறமுடியாது. நம் ஓர் செய்தி வெளியிட விரும்பினால் பத்திரிகைகளுக்குத் தெரிவிப்போம் என்றும், அதுதவிர வேறு வழிகளில் எம்மிடமிருந்து செய்திகள் கிடைக்காது என்று கூறிவிட்டார். (லோ)

### புதிய உலக

கள் காக்கப்படும் என்றும் அந்த நாடுகளின் சுதந்திரமும் கட்டிக் காக்கப்படும் என்றும், ஆகவே இந்த மூன்றாம் உலக நாடுகளின் ஆதரவு தமக்குத் தேவையென்றும் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

### 7 யாழ்.

இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது லண்டன் வாசியான வடபகுதி நபர் ஒருவரே மேற்படி நபர்களை அங்கு அழைத்துச் செல்வதில் ஈடுபட்டிருந்தாராம். அவரையும் பொலிஸார் தற்போது விசாரணைக்குட்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

விமான நிலையத்தில் இவர்களது லண்டன் வதிவிட விசா குறித்து கடவுச்சீட்டு விபரத்தைக் கண்ட விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் அதன்மீது சந்தேகம் கொண்டு இங்குள்ள தூதரகத்துடன் தொடர்பு கொண்டு சோதனையிட்டபோதே அவை போலியானது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிய வருகிறது.

மேற்படி தமது கோரிக்கைக்கு தொடர்பாக குறிப்பிட்ட கால எல்லைக்குள் பதில்தரும்படி சுகாதார அமைச்சுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

ஒரே பல்கலைக் கழகத்தில் ஒரே மருத்துவ பாடத்திட்டத்தின் கீழ் கல்விகற்ற வெவ்வேறு மாவட்ட போதனா மருத்துவ மனைகளின் வைத்தியக் கலாநிதிகளுக்கு இவ்வாறான அவநிலை ஏற்பட்டிருக்கிறது. (ஈ)

### ஆனையிறவு

செல்வம் ஸ்ரோர்ஸில் வீழ்ந்ததில் கடைமுற்றாக சேதமடைந்தது. கடைக்குள் நித்திரையில் இருந்த கடை உரிமையாளரும் அவரின் தாயாரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். (49)

### யாத்திரிகர்கள்

னும் (வயது 48), அவரின் அருகில் இருந்த செ. தர்மகுலசிங்கம் மற்றொருவரும் காயமடைந்தனர். இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். (லோ, செ. த மை)

### யாழ். மாநகர

இதற்கு உடனடியாகப் பணம் பெற்று வழங்குவதற்கு மாநகர சபையிடம் பணவசதி இல்லை என்றார்.

மேற்கொண்டு இந்த விடயம் குறித்து தமது மேலிடங்களுக்கு அறிவித்திருப்பதாகவும், இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாகத் தாம் தொழிலாளர்களுக்கு உத்தரவாதம் அளித்திருப்பதாகவும் கூறினார். (லோ)

### பெரியபளையில்

சேர்ந்த செல்வி ந. பத்மநாதன் (வயது18) என்ற இளம் பெண் படுகாயமடைந்து தனது வலது கையை இழந்தார். இந்தத் தாக்குதலின் போது மாடு ஒன்றும் பலியானதுடன், சில வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

### தென்னாபிரிக்காவில்

தெரிவித்தார்

மேலும் கறுப்பின தலைவர்களுடன் பேசி அரசியல் சட்டம் தொடர்பாக ஒரு முடிவிற்கு வரும்வரை சிறுபான்மை வெள்ளை இன அரசே பதவியில் தொடர்வது இருக்கும் எனவும் அவர் அறிவித்தார்.

னைக் குழுவினர் தேடுதல் வேட்டை நடத்தியபொழுது பதுக்கி வைக்கப்பட்ட பல பொருள்கள் மீட்கப்பட்டன. சங்கத்தானையில் 2 மூடைசீனி 8 பரல் தேங்காயெண்ணெய் 1 பெட்டி சன்லைட் ஆகியவையும், கச்சாய் வீதியில் 3 பரல் மண்ணெண்ணெயும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. சாவகச்சேரி சந்தைக்குள் 1 சன்லைட் சோப் 13ரூபா விற்பனை செய்த வியாபாரியிடமிருந்து 64 சோப்புகள் கைப்பற்றப்பட்டன. இவை அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேற்படி பிரதேசப் பொறுப்பாளரினால் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. (செ க. மை.)

### கொழும்பு

மிகமோசமாக காயமடைந்தவரின் உடல் பலமணி நேரங்களின் பின் அங்கிருந்து அகற்றப்பட்டு வடபகுதிக்கு கொண்டுவர இராணுவத்தினர் அனுமதித்தனர். அவரது பெயர் அ. தியாகராசா (48) ஆகும். இவரது சகோதரன் அங்கு விரைந்து அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தார். தலையில் காயமடைந்துள்ளதால் இவர் உயிர் தப்புவதற்கு உத்தரவாதம் தரமுடியாது என தமக்கு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்து விட்டதாக அவர் நேற்று தெரிவித்தார்.

மேலும் வவுனியா தடை முகாமினூடாக பொதுமக்கள் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்காமையால் கொழும்பு செல்வதற்காகச் சென்ற நூற்றுக்கணக்கான பிரயாணிகள் நேற்றிரவு யாழ். நோக்கித் திரும்பியுள்ளனர். (லோ) (மு)

### முக்கூட்டுப்படை

இருபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும், பொலிஸாரும், ஊர்காவல் குழுவினரும் இணைந்து வெளியேறியுள்ளனர்.

வெலிஓயா வெளி இராணுவ முகாமிலிருந்து 300 யார் தொலைவில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி இவர்கள்வந்த எல்வ் வாகனம் முற்றாகச் சேதமடைந்துள்ள இதில் வந்தவர்களில் பலர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்துமுள்ளனர் எண்ணிக்கை விபரம் தெரிய வரவில்லை. (மு)